பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 புரட்டாதி 05 வெள்ளிக்கிழமை 22.09.2023 அதிர்வு 53

## திருமலை விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

- அப்துல் சலாம் யாசீம் -

திருகோணமலை – சேருவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் 04




### தியாக தீபம் திலீபனின்

# நினைவேந்தலுக்கு தடை விதிக்க

# யாழ். நீதிமன்றம் மீண்டும் மறுப்பு



## பொலிஸாரின் மனு தள்ளுபடி

- எஸ்.நிதர்ஷன் -

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்குத் தடை விதிக்க முடியாது என இரண்டாவது தடவையாகவும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் இன்று கட்டளை பிறப்பித்தது.

திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டுமென யாழ்ப்பாணம் பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை (19) மனுத் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவைத் தள்ளுபடி செய்து மறுநாள் புதன்கிழமை (20) யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. 04

## பருத்தித்துறை பொலிஸின் தடை கோரிய மனுவும் 'அவுட்'

- வடமராட்சி நிருபர் -

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடை செய்யக் கோரி பருத்தித்துறை பொலிஸார் தாக்கல் செய்த மனுவை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் இன்று நிராகரித்தது. 04

## சிவாஜிக்குக் குற்றப்பத்திரம்!

### பிணையில் விடுவித்தது கொழும்பு மேல் நீதிமன்றம்



- எஸ்.நிதர்ஷன் -

2020ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வை 04

# ஜனநாயக அரசியல் அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாம் வெற்றி பெற்றோம்

### உலகத் தலைவர்கள் முன்னிலையில் ரணில் பெருமிதம்

"இலங்கையில் நமது நாடாளுமன்றத்தை ஆக்கிரமிக்கும் முயற்சிகளால் நமது ஜனநாயக மரபுகள் கூட அச்சுறுத்தலுக்கு உள்ளாகின. இருந்த போதிலும், ஆழமாக வேரூன்றிய மற்றும் உறுதியான ஜனநாயக மரபுகள் காரணமாக ஜனநாயக அரசியல் அதிகார மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாங்கள் வெற்றி பெற்றோம்."



– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகத் தலைவர்கள் முன்னிலையில் தெரிவித்தார். 07



# இலங்கைக்குப் பாராட்டு கூறியுள்ள உலக வங்கி!

இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து பாராட்டுவதாக இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கான உலக வங்கியின் பணிப்பாளர் பாரிஸ் ஹடாட்ஜேர்வோஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்று (21) வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக நிலைமை குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது.

வடமாகாணத்தின் கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு உலக வங்கி பூரண அனுசரணையை வழங்கும்.

இறுதி யுத்தத்தின் பின்னர் மக்கள் மீள்குடியேறி தற்போது நிம்மதியான வாழ்க்கைக்குத் திரும்புவது மிகவும் மகிழ்ச்சியை தருகிறது என்று தெரிவித்தார்.

இதன்போது வடக்கு மாகாண ஆளுநர், வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை குறித்து உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு தெரியப்படுத்தினார்.

கல்வி, சுயதொழில், உட்கட்டமைப்பு மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதில் வடக்கு மாகாணத்திற்கு ஆதரவளிக்குமாறும் உலக வங்கி பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்.

இதன்படி, எதிர்காலத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட மக்களின் வாழ்க்கையை மேலும் மேம்படுத்த உலக வங்கி பூரண ஆதரவை வழங்கும் என்று இலங்கை, மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கான உலக வங்கியின் பணிப்பாளர் உறுதியளித்தார்.

# வாகனச் சாரதியைத் தாக்கினர்: சந்தேகத்தில் மூன்று பேர் கைது!

பட்டா ரக வாகனத்தை வழிமறித்து, அதன் சாரதியை கடுமையாக தாக்கிய குற்றச்சாட்டில் 3 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – ஆனைக்கோட்டை, உயரப்புலம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை (18) இரவு வீதியில் பயணித்த பட்டா ரக வாகனத்தை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் அடங்கிய கும்பல் வழி மறித்து, சாரதியை சரமாரியாக தாக்கி விட்டு அங்கிருந்து தப்பி சென்றிருந்தது.

சம்பவத்தில் காயமடைந்த சாரதி சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம்தொடர்பில்விசாரணைகளை முன்னெடுத்த மானிப்பாய் பொலிஸார், தாக்குதலை மேற்கொண்ட குற்றச்சாட்டில் மானிப்பாய், கல்வியங்காடு மற்றும் மணியந்தோட்டம் பகுதிகளை சேர்ந்த 3 இளைஞர்களை செவ்வாய்க்கிழமை (19) கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருகோணமலை கன்னியா காட்டில் மோட்டார் குண்டு!

திருகோணமலை கன்னியா காட்டுப் பகுதியில் இருந்து மோட்டார் குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இன்று (22) காலை கன்னியா சுடுதண்ணீர் கிணற்றுக்கு செல்லும் வீதிக்கு அண்மையில் உள்ள காட்டுப் பகுதியில் குண்டு மீட்கப்பட்டுள்ளது என்று தெரி



விக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சம்பூர் நவரெட்ணபுரம் காட்டுப் பகுதியில் ரி56 ரக துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இந்தப் பகுதியில் மீட்கப்பட்டுள்ளது என்றும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுமியை வன்புணர்ந்த சம்பவம்:

# குற்றவாளிக்கு 17 வருடங்களின் பின் 14 வருட கடூழியச் சிறைத் தண்டனை!

17 வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியின் சகோதரியான சிறுமியை வன்புணர்ந்தார் என்று குற்றம் சாட்டப்பட்ட 59 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு 14 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 10,000 ரூபா அபராதமும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒன்றரை லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்கவும் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

கடந்த 21.04.2006 அன்று, குற்றம் சாட்டப்பட்டவரின் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில், குற்றம் சாட்டப்பட்டவரின் மனைவியின் பதின்ம வயது சகோதரியை, குற்றம் சாட்டப்பட்ட நபர் வலுக்கட்டாயமாக வன்புணர்வு செய்துள்ளார். சிறுமி இது குறித்து தனது உறவினரிடம் கூறியுள்ளார். சம்பவம் தொடர்பில் திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் விசாரணைகளை மேற்கொண்ட திஸ்ஸமஹாராம பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்து திஸ்ஸமஹாராம நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். முதற்கட்ட விசாரணையின் பின்னர் சட்டமா அதிபர் அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக மேலதிக குற்றச்சாட்டுக்களை தாக்கல் செய்தார்.

விசாரணையில், குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். அதன்படி, குற்றம் சாட்டப்பட்டவருக்கு 14 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து உயர்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்தார். மேலும், 10,000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அதனை செலுத்தாவிட்டால் மேலும் ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒன்றரை லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவும், குற்றம் சாட்டப்பட்டவர் அதைச் செலுத்தவில்லை என்றால், மேற்கூறிய தண்டனைகளுக்கு மேலதிகமாக, மேலும் இரண்டு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்கவும் உத்தரவிட்டார். சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி அனுராதா விஜேசுரேந்திர இந்த முறைப்பாட்டுக்கு தலைமை தாங்கினார்.

# மருத்துவரின் பரிந்துரை இன்றி மாணவர்களுக்கு ‘இன்ஹலர்’!

## வழங்கிய வர்த்தகர் பொலிஸாரால் கைது

குருநாகல் கொகரெல்ல பிரதேசத்தில் மருத்துவரின் பரிந்துரை சீட்டு இன்றி பாடசாலை மாணவர்களுக்கு ‘இன்ஹலர்’ கருவிகளை வழங்கினார் என்று கூறப்படும் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இப்பாகமுவ பிரதேசத்தில் உள்ள அரச பாடசாலை ஒன்றின் ஆசிரியர் ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று அந்தப் பாடசாலையின் ஆசிரியர், மாணவர்களின் புத்தக பைகளை அவசரமாக ஆய்வு செய்ததில், பல மாணவர்களின் பைகளில் ‘இன்ஹலர்’கள் இருப்பது தெரியவந்துள்ளது.

அங்கு மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இப்பாகமுவ பிரதேசத்தில் தொலைபேசி விற்பனை நிலையமொன்றை நடத்தும் ஒருவரால் இந்தக் கருவிகள் விற்பனை செய்யப்பட்டன என்று மாணவர்கள் தெரிவித்தனர்.

இதனை அடுத்து ஆசிரியர் கொகரெல்ல பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் குருநாகல் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

# நிரந்தர வரிக் கொள்கை இன்மையே முதலீட்டாளர்கள் பின்னிற்கக் காரணம்

## அரசின் நிதிக் குழுவின் தலைவர் தெரிவிப்பு

இலங்கையில் குறிப்பிட்ட நிரந்தர வரிக் கொள்கை இல்லாமையே முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்களின் ஊக்கமின்மைக்கு காரணம் என்று அரசின் நிதிக் குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

மூன்று வர்த்தமானிகளின் உத்தரவுகளை ஆராய குழு கூடிய போது இது தொடர்பில் அவர் கருத்து வெளியிட்டது என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட நிரந்தர வரிக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். இந்தப் புதிய வரிவிதிப்புக்கான அடிப்படை, நோக்கம் மற்றும் அதன் தாக்கம் ஆகியவற்றை அறிக்கையாக வழங்குமாறு நிதி மற்றும் தொழில்துறை அமைச்சக அதிகாரிகளுக்கு அரசாங்க நிதிக் குழு உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையில், அரசு நிதிக் குழு வழங்கிய பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத நிறுவனங்கள் மற்றும் தரப்பினரை உரிய காலக்கெடுவுக்குள் அழைக்க அரச நிதி தொடர்பான குழு தீர்மானித்துள்ளது.

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்றம் குறித்து பின் தொடர வேண்டியதன் அவசியத்தை அரசநிதிக்கான குழு வலியுறுத்தியுள்ளது என்றும் நாடாளுமன்ற தகவல் தொடர்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இலங்கைக்கு வர்த்தக இருப்பு மிகுதியாக இருப்பதாக சர்வதேச உறவுகளுக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவில் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டன. ஜி.எஸ்.பி பிளஸ், ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க பிராந்தியங்களுக்கு இடையிலான வர்த்தக உறவுகள் குறித்து இலங்கை மத்திய வங்கியால் முன்வைக்கப்பட்ட விளக்கக் காட்சியின் போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது என்றும் நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.



# இந்தியாவுக்கு எதிராக 276 ஓட்டங்களைச் சேர்த்தது ஆஸி.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்தியாவுக்கு 277 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்தியா – அவுஸ்திரேலியா மோதும் மூன்று போட்டிகளைக் கொண்ட ஒருநாள் (50 ஓவர்கள்) தொடரின் முதல் ஆட்டம் இன்று பிற்பகல் மொகாலியல் ஆரம்பித்தது.

பகல் – இரவு போட்டியாக நடைபெறும் இந்த முதல் ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, நான்கு ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் முதல் விக்கெட்டை முதல் ஓவரின் நான்காவது பந்தில் பறிகொடுத்தது. மிச்செல் மார்ஷ் அணிக்காக 4 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் மொஹமட் சமியின் பந்துவீச்சில் சுப்மன் கில்லிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய அவுஸ்திரேலிய அணி, 18.2ஆவது ஓவரில், டேவிட் வோர்னரை அரைச்சதம் (52) கடந்த நிலையில் பறிகொடுத்தது. அப்போது அவுஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கை 98 ஆக இருந்தது.

பின்னர் ஸ்ரீபன் ஸ்மித் (41), மார்னஸ் (39), கமரூன் (31), மார்கஸ் (29), ஜோஸ் (45) ஆகியோரும் தமது பங்குக்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆட்டமிழந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து , மத்தீவ் (2), அப்பொட் (2), அடம் சாம்பா (2) ஆகியோர் வரிசையாக ஆட்டமிழக்க, அவுஸ்திரேலிய அணி, 50 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 276 ஓட்டங்களைச் சேர்த்தது.

இந்தியா சார்பாக பந்துவீச்சில், மொஹமட் சமி 5 விக்கெட்டுகளை அள்ள, பூம்ரா, அஸ்வின், ஜடேயா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்திய அணி 277 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கவுள்ளது. (இச்செய்தி எழுதப்படும்வரை ஆட்டம் ஆரம்பிக்கவில்லை)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### நினைவேந்தலுக்கு...

இந்தநிலையில், பொலிஸ் திணைக்களத்தின் சட்டம், ஒழுங்கு பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவொன்று, நேற்று கொழும்பிலிருந்து ஹெலியில் வந்து யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் அவசர மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இதில், தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் வன்முறை வடிவம் எடுப்பதால், அவசரமாக நினைவேந்தலைத் தடைவிதிக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்தனர்.

அத்துடன், வவுனியா – பம்பைமடுவில், சிவில் உடையில் வந்து வீடியோ படம் பிடித்த புலனாய்வாளர்களின் கைத்தொலைபேசி பறிக்கப்பட்டு, காட்சிகள் அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வீடியோவையும் நீதிவானுக்கு அவர்கள் திரையிட்டுக் காண்பித்தனர்.

“இந்தச் சம்பவத்துக்கு எதற்காக நினைவேந்தலைத் தடை விதிக்க வேண்டும்? அதற்கு எதிராகப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருக்கலாம் அல்லவா?” – என்று நீதிவான் வினவிய போது, அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வன்முறை பரவலைத் தடுக்கத் திலீபனின் நினைவேந்தலைத் தடை செய்ய வேண்டும் என்றும் பொலிஸார் கோரினர்.

எனினும், இன்று மதியம் 1.30 மணியளவில் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலுக்கு தடை விதிக்கக் கோரிய பொலிஸாரின் இரண்டாவது மனுவையும் தள்ளுபடி செய்து நினைவேந்தலைத் தடை விதிக்க முடியாது என்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்து அறிவித்தது.

### திருமலை விபத்தில்...

மற்றுமொருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சேருவில – காவன் திஸ்ஸபுர பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதே பகுதியில் வசித்து வந்த குலங்கமுவே கெதர குலரத்ன (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த விபத்தில் படுகாயமடைந்த மற்றைய நபர் சேருநுவர பிரதேச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சேருவில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### பருத்தித்துறை...

தியாகி திலீபனின் நினைவாக நிகழ்வுகள், ஊர்திப் பவனிகளை நடத்துவதன் மூலம் வன்முறைகள் உருவாகும் சூழல் நிலவுகின்றது எனக் குறிப்பிட்டு பருத்தித்துறை பொலிஸார் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

வன்முறையில் யாராவது ஈடுபட்டால் அவர்களைக் கைது செய்யப் பொலிஸாருக்கு அதிகாரம் உண்டு என்று சுட்டிக்காட்டிய நீதிவான், அமைதியான நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுக்க முடியாது என்று உத்தரவிட்டார்.

### சிவாஜிக்கு...

ஏற்பாடு செய்தமை அல்லது பங்குபற்றியமை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்துக்குக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இன்று குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

எம்.கே.சிவாஜிலிங்கம் மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கொழும்பு மேல்நீதிமன்றத்தில்தொடரப்பட்டவழக்கில் இன்று முன்னிலையாகியபோது, குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகை இன்று சிவாஜிலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் 27ஆவது பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினரான திலீபன் என்ற இராசையா பார்த்தீபனின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வை 2020 செப்டெம்பர் 15ஆம் திகதி அல்லது அதற்கு அடுத்த நாள் யாழ்ப்பாணம் கோண்டாவில் கோகுல வீதியில் நடத்தினார் என்றும், 2011 ஓகஸ்ட் 29ஆம் திகதி விடுதலைப் புலிகளை தடைசெய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகளை மீறியதாகவும் குற்றம் சுமத்தப்பட்ட சிவாஜிலிங்கத்திற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

2022ஆம் ஆண்டு சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட 7 தவணைகளில் எம்.கே.சிவாஜிலிங்கம் நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. அவர் இந்தியாவில் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

கடந்த ஓகஸ்ட் 25ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குற்றஞ்சாட்டப்பட்ட சிவாஜிலிங்கம் நீதிமன்றில் ஆஜராகாத காரணத்தினால் அவரை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிடியாணை பிறப்பித்திருந்தார்.

இந்தநிலையில், சட்டத்தரணி உதார முஹந்திரத்தின் ஆலோசனையின் பேரில், ஜனாதிபதியின் சட்டத்தரணி நியன்சி அரசகுலரத்ன, இரட்ணவேல் ஊடாக சிவாஜிலிங்கம் இன்று நீதிமன்றில் முன்னிலையானார்.

தமது கட்சிக்காரர் மருத்துவ சிகிச்சைகாக இந்தியா சென்றுள்ளதாகவும், இது குறித்து அறிந்த பின்னர் அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியதாகவும் அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

சிவாஜிலிங்கத்தின் உடல்நிலையை கருத்தில் கொண்டு அவரை பிணையில் விடுவிக்க வேண்டுமென்றும், அவரை விளக்கமறியலில் வைப்பது அவரது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் சுட்டிக்காட்டிய சட்டத்தரணிகள், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், மேல் நீதிமன்ற நீதிபதி தனக்குள்ள அதிகாரத்தின்படி, பிணை வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

முன்வைக்கப்பட்ட அனைத்தையும் பரிசீலித்த நீதிபதி, தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் சிவாஜிலிங்கத்தை விடுவிக்க உத்தரவிட்டார்.

பின்னர் இந்த வழக்கை ஒக்டோபர் 20ஆம் திகதி விசாரணைக்கு அழைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

சிவாஜிலிங்கத்தை கைது செய்த போது கைப்பற்றிய வாழைக்குற்றி, கற்பூரம் உள்ளிட்ட பொருட்களை பொலிஸார் சான்றுப் பொருட்களாகக் குறிப்பிட்டிருந்தனர்.

# திருகோணமலைச் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று கிழக்கு மாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும்

## சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் அறிக்கை

தியாக தீபம் திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தியும் அதனோடு பயணித்தவர்கள் தாக்கப்பட்டமைக்கும் தார்மீக பொறுப்பை ஏற்று கிழக்கு மாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும்.

இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இன்று (22) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு–

தியாக தீபம் திலீபன் மக்கள் அஞ்சலி ஊர்தியும் அதனோடு பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் உட்பட ஏனையோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வைத்துத் தாக்கப்பட்டுள்ளனர்.

இதற்கான தார்மீகப் பொறுப்பை ஏற்று கிழக்கு மாகாண ஆளுநர் பதவி விலக வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களிடத்தும், ஒட்டுமொத்த தியாக தீபம் திலீபன் உணர்வாளர்களிடத்தும் மன்னிப்பு கேட்க வேண்டும். நாட்டின் பாதுகாப்புத் துறை ஜனாதிபதியிடமே உள்ளது. அவரின் பிரதிநிதியாக மாகாணத்தில் செயல்படுபவரே ஆளுனர் .

அவர் தனது கடமையைச் செய்யத் தவறிவிட்டு, அமைதியாக வீதியில் பயணித்த நினைவஞ்சலிக் குழுவினரைக் குற்றம் சாட்டுவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை தியாக தீபம் திலீபனின் அகிம்சை உணர்வோடு கூறுகின்றோம்.

தியாக தீபம் திலீபனின் மக்கள் அஞ்சலி ஊர்தி பயணத்தை ஆரம்பித்து



மூன்றாம் நாளே கொடூர கொலைவெறி இனவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளானது. தாக்கியவர்களின் கைகளில் சிங்கக் கொடியை காணப்பட்டது.

அதுவே ஆளுநரின் அலுவலகத்தையும் அலங்கரிக்கின்றது. சிங்க சிந்தனையே தாக்குவதற்குக் காரணம்.

ஊர்தி பயணத்தை ஆரம்பித்த நேரத்தில் இருந்து அரச புலனாய்வாளர்களும் பொலிஸாரும் ஊர்தியை அதனோடு பயணித்தவர்களை நேரடியாக ஒளி, ஒலி பதிவு செய்துள்ளனர். புகைப்படங்களையும் எடுத்து உரிய தரப்புக்குத் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டே இருந்ததோடு கள நிலவரங்களையும் தெரியப்படுத்திக் கொண்டே இருந்தனர்.

இவர்களுக்குக் கள நிலவரம் நன்றாக தெரிந்திருந்த நிலையிலேயே தாக்குதல் நடந்திருந்தது என்றால் அது திட்டமிட்ட இனவாதிகளின் செயல்பாடுகள் என்றே கூறவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜ் கஜேந்திரன் நேரடியாக அரசின் பாதுகாப்பை மறுத்து இருந்தாலும் அவருக்கான பாதுகாப்பைத் தனது மாகாணத்தில் கொடுக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் மாகாண ஆளுநருக்கு உள்ளது.

ஊர்திப் பயணத்தை ஆரம்பித்த முதல் நாளே அக்கரைபற்றில் எதிர்ப்பு இருந்தது. இரண்டாம் நாள் வாழைச்சேனை பிரதேசத்திலும் எதிர்ப்பு இருந்தது. இதனை நன்றாக தெரிந்திருந்த பாதுகாப்பு தரப்பினர் தொடர்ந்து பயணத்தை உரிய பாதுகாப்பின்றி தொடர்ந்து செல்ல அனுமதி தந்தார்கள் எனில் அது தாக்குதல் நோக்கம் கொண்டதாகும்.

இவ்வாறான தாக்குதலுக்கு இடம் அளித்த பொலிஸ் அதிகாரிகள் குற்றவாளிகளே. மாகாண மட்டத்தில் அவருக்கு பொறுப்பாக இருக்கின்றவர்களும் குற்றவாளிகளே. ஆளுநரும் குற்றவாளியே.

சிங்கள பௌத்த இனவாத காடையர்களை பாதுகாக்க ஆளுநர் நாடாளுமன்ற உறுப்பினர் மீதும் ஊர்தியோடு பயணித்தவர்கள் மீதும் குற்றம் சுமத்துகின்றார். எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை எவருக்கும் உள்ளது.

ஆனால் தாக்குதல் நடத்தவும்,சேதங்கள் விளைவிக்கவும் எவருக்கும் உரிமை இல்லை. தாக்கிச் சேதங்களை விளைவித்தவர்களைப் பாதுகாக்கும் நோக்கில் பொறுப்பு வாய்ந்த ஆளுநர் கருத்து தெரிவிப்பதன் மூலம் அவர் யாருக்குப் பொறுப்பு வகிக்கின்றார் என்பது தெளிவாக இருக்கிறது.

எனவே ஆளுநர் அவர்கள் பொறுப்பு தவறியது முதற் குற்றம். பொறுப்பை தட்டிக் கழித்து பிழையை அடுத்தவர் மேல் சுமத்துவது அதனை விட பெரிய குற்றம். இன, மத ரீதியிலான கொலைக் குற்றவாளிகளே நாட்டை ஆளுகின்ற போது சாதாரண மக்கள் குற்றவாளிகளாக அடையாளப்படுத்தப்படுவது இயல்பே. இதற்கு முகம் கொடுக்கவும், தமிழர் களின் அரசியலை வென்றெடுக்கவும் தமிழர் தேசமாக தியாக தீபம் திலீபனின் உயிர்தியாக நாளில் ஒன்று சேர்வோம். எம் மக்கள் சக்தியை வெளிப்படுத்து வோம். காண்பிப்போம் . அரசியல் வழித் தடத்தை நாம் தீர்மானிப்போம்.–என்றுள்ளது.

# சிறுமியை வன்புணர்ந்த குற்றச்சாட்டு 68 வயதான நபர் பொலிஸால் கைது!

மொனராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கும்புக்கன அந்தரமண்டியில் வசிக்கும் 12 வயதும் 06 மாதங்களுமேயான சிறுமியை பாலியல் வன்புணர்வு புரிந்த 68 வயதுடைய முதியவர் மொனராகலை பொலிஸாரால் நேற்று முன்தினம் (20) கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல், சிறுமி வீட்டில் தனியாக இருந்தபோது, வீட்டின் அருகில் வசிக்கும் ஒருவர் வந்து அவ்வப்போது பாலியல் வன்புணர்வு செய்துள்ளார் என்று பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

சம்பவம் தொடர்பில் 68 வயதுடைய முதியவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் மொனராகலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

வன்புணர்வுக்கு உள்ளான சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# விபத்தில் காயமடைந்த நபர் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

யாழ்ப்பாணம் – தாழையடிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ். – தாழையடியைச் சேர்ந்த சின்னையா தன பாலசிங்கம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருகையில்,

கடந்த வெள்ளிக்கிழமை (15) தாழையடிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் படுகாயமடைந்த நிலையில் மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று (21) மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தூற்றுவதில் பயனில்லை

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலை வர் சஜித் பிரேமதாஸ, நாட்டைப் பொருளாதார ரீதியில் குட்டிச்சுவராக்கி, அழித்த மொட்டுக் கட்சியின் எம்.பிக்கள் எவ்வாறு அரசு செலவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐ.நா. நிகழ்வுக்காக அமெரிக்காவுக்குக் கூட்டிச் செல்லப்பட்டனர் என்று கேள்வி எழுப்பி இருக்கின்றார்.

இந்தக் கேள்வியில் ஒரு பக்கத்தில் நியாயம் இருந்தாலும், தாம் வீசும் அரசியல் வாள் இரண்டு பக்கமும் கூர்மையானது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் உணராமல் உரையாற்றி இருக்கின்றார் என்பது போலவே தோன்றுகின்றது.

ஏதோ தற்போதைய நாடாளுமன்றம் 2020 இல் தெரிவான பின்னர் நடந்த நிகழ்வுகளினால் மட்டுமே நாட்டுக்குப் பெரும் பொருளாதார வீழ்ச்சி கிட்டியமை போலவும், அந்த நேரத்தில் பதவியில் இருந்த தரப்புகள் மட்டுமே இந்தப் பொருளாதாரப் பெரு வீழ்ச்சிக்குக் காரணம் என்பது போலவும் தோற்றும் கருத்தையே எதிர்க்கட்சித் தலைவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்

ஆனால் இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் - அதுவும் குறிப்பாக 1977 இக்குப் பின்னர் - அதிகாரத்துக்கு வந்த அனைத்து அரசுகளும் மாறி மாறிப் போட்டி போட்டு வாங்கிக் குவித்த அளவிட முடியாத கடனின் விளைவுதான் இந்தப் பொருளாதாரப் பெரு வீழ்ச்சி.

அப்படியிருக்க, அது ஏதோ 2020 இற்குப் பின்னர் தான் இந்த விடயங்கள் கருக்கட்டி நெருக்கடியானமை போல கதை விடப் பார்க்கின்றார் எதிர்க்கட்சி தலைவர்.

அவரது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸா மற்றும் அவர் உட்பட கடந்த 45 வருடங்களுக்கு மேல் பதவியில் இருந்த அனைவருமே இன்றைய இழிநிலை ஏற்படக் காரண கர்த்தாக்கள்தான். இது மறுக்கப்பட முடியாத உண்மை.

மீளச் செலுத்த இயலாத அளவுக்குக் கடன் வாங்கிக் குவித்து, 'கடன் வாங்கி கல்யாணம் செய்துவிட்டு' அவர்களெல்லாம் போய்விட்டார்கள். பதில் சொல்லும் இக்கட்டு கடைசியில் கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் வந்து விழுந்தது. வெளிப்பட்டது. அவ்வளவுதான்.

கோட்டாபயவின் இரண்டரை வருட கால ஆட்சி அந்தப் பொருளாதார நெருக்கடி நிலைமையை வீறுகொண்டெழுந்து வெளிப்படக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அக்காலகட்டத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மாத்திரம்தான் நாட்டின் பொருளாதாரத்துக்கு இத்தகைய மோசமான நிலையை ஏற்பட்டு விட்டது என்று கூறுவது அபத்தத்திலும் அபத்தம்.

இத்தகைய விடயங்களில் 'நதிமூலம், ரிஷிமூலம் கண்டு' பேசுவதுதான் பொறுப்பான செயல்முறையாக இருக்கும். இருக்க முடியும்.

நாட்டைக் கூறு போட்டுச் சிதைத்தழிக்கும் பேரினவாதச் சிந்தனைப் போக்குக்கும், இனவாத நடவடிக்கைகளுக்கும் முடிவு கட்டி, நல்லிணக்கமும் அமைதியும் சமாதானமும் நிலவும் சமூகச் சூழ்நிலையை ஏற்படுத்தக்கூடிய தீர்வு முறைமை ஒன்றைக் கண்டறிந்து, நடைமுறைப்படுத்தி, அந்தப் பின்புலத்தில் பொருளாதாரக் கட்டமைப்பைச் சீர்படுத்த முயற்சிப்பதே இன்றைய நோய்க்குச் சரியான மருந்தாக இருக்க முடியும்.

இதை விடுத்துப் பொருளாதார பின்னடைவுகளுக்குத் தனிநபர்கள் அல்லது கூட்டத்தினர் மீது மட்டும் குற்றம் சுமத்தி வசை பாடுவதில் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை.

## இலங்கைக்குத் திரிபோஷா வழங்க அமெரிக்கா ஆதரவு

உலக உணவுத் திட்ட அமைப்பின் மூலம் இலங்கையிலுள்ள தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் திரிபோஷ வழங்க அமெரிக்கா ஆதரவளித்துள்ளது.

திரிபோஷ உணவுத் திட்டத்தைத் தொடர்வதற்கு ஆதரவாக, 4,700 மெட்ரிக் டன் சோயா பீன்ஸ் மற்றும் சோளங்களை சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்காவின் முகவர் நிலையமானது ஸ்ரீலங்கா திரிபோஷா லிமிடெட் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.

ஐக்கிய நாடுகளின் அமைப்பானது இலங்கையிலுள்ள திரிபோஷ தொழிற்சாலையில் நடைபெற்ற விசேட நிகழ்வில் குறித்த மூலப்பொருடள்கள் கையளித்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை சமூகங்களுக்கு ஆதரவளிக்கும் அமைப்பின் அவசர நடவடிக்கைக்கு அமெரிக்காவிடமிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர்களின் பரந்த பங்களிப்பின் ஒரு பகுதியாக இந்த மூலப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டிலும் உலகளவிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்பாளராக, உணவு பாதுகாப்பற்ற இலங்கை குடும்பங்களுக்கு பணம், உணவு உதவி மற்றும் பற்றுச்சீட்டுகளை வழங்குவதற்கு உலக உணவுத் திட்ட அமைப்புக்கு அமெரிக்கா உதவியுள்ளது.

அதேவேளை பாடசாலை உணவு மற்றும் திரிபோஷா – வலுவூட்டப்பட்ட கலப்பு உணவு தயாரிப்பு உட்பட தேசிய உணவு மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களை அமெரிக்கா ஆதரிப்பதாக தெரிவித்துள்ளது.

## யாழ். கல்வியியல் கல்லூரி பீடாதிபதிக்கு முனைவர் பட்டம்



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி சு.பரமானந்தம் கொழும்பு பல்கலைக் கழகத்தில், கற்றல் கற்பித்தலில் தொழில்நுட்ப வளங்களை ஒருங்கிணைத்தல் எனும் பொருளில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தைப் பெற்றுள்ளார்.

அவர் தனது ஆரம்பக் கல்வியை வ–முதலியார் குளம் றோ.க.த.க. பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை வ –செட்டிக்குளம் மகாவித்தியாலயத்திலும் க.பொ.த உயர்தரத்தை வ– தமிழ் ம.வி யிலும் கற்றவர்.

ஆரம்பத்தில் கணித விஞ்ஞான ஆசிரியராகக் கடமையை ஆரம்பித்து இன்று இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் ஒன்றில் பீடாதிபதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கடமையாற்றுகின்றார்.

பட்டப் படிப்பை பேராதெனிய பல்கலைக் கழகத்திலும் முதுகல்வி விஞ்ஞானமாணிப் பட்டத்தை வட அயர்லாந்து அல்ஸ்ரா பல்கலைக் கழகத்திலும், லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக் கழகத்தில் கணனி கற்பித்தலில் சான்றிதழையும் பெற்றுள்ளார்.

பல கல்வியியல் சார்ந்த கட்டுரைகளையும் நுல்களையும் வெளியிட்ட அதேவேளை கல்வியில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் கட்டுருவாக்கவாதம் மற்றும் கல்வித் தொழில்நுட்பம் போன்ற நூல்கள் ஆசிரிய கல்வியில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஜனநாயக அரசியல்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தின் வளமான எதிர் காலத்தை உறுதிசெய்து, நாட்டின் அனைத்து பிரிவினருக்கும் பயனளிக் கும் நிலைபேறான மற்றும் நிலையான வளர்ச்சியை நோக்கி நாட்டை இட்டுச் செல்வதே தனது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்த இலக்கை அடைவதற்கு இலங்கை மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையும் ஆதரவும் தனக்குக் கிடைக்கும் என நம்புவதா கவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுக ளின் தலைமையகத்தில் நேற்று (21) இடம்பெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்த கூட்டத்தொடர் நேற்று (21) இலங்கை நேரப்படி இரவு 10.00 மணி யளவில் ஆரம்பமானது. இதில் பங்கேற்க வந்த அரச தலைவர்களை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் அன்புடன் வரவேற்றார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய முழுமை யான உரை வருமாறு:-

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத் தொடரின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள டிரினிடேட் மற்றும் டொபாகோவின் மாண்புமிகு டென்னிஸ் பிரான்சிஸ்/க்கு முதலில் எனது மன மார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்மைய நாட்களில் மொரோக்கோ மற்றும் லிபியாவைத் தாக்கிய இயற்கைப் பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள் கின்றேன். இந்தக் கடினமான நேரத்தில் எங்கள் மொரோக்கோ மற்றும் லிபிய நண்பர்களுடன் நாங்கள் கைகோர்த்து நிற்கிறோம்.

“நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்பு தல் மற்றும் ஒற்றுமையை நிலைநாட்டு தல்” என்பது இன்றைய பலதரப்புக்கு முன்னால் உள்ள சவால்களைப் பற்றி சிந்தித்துப் பார்ப்பதற்கு மட்டுமல்ல, கடந்த வருடத்தில் எனது நாடான இலங்கையில் ஏற்பட்ட விடயங்களை மறுபரிசீலனை செய்வதற்கும் சரியான பிரவேசம் ஆகும்.

கடந்த ஆண்டு இந்த நேரத்தில், பல உலகளாவிய நெருக்கடிகளுக்கு மத்தி யில், இலங்கை சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக அண்மைக் காலங்களில் மிகவும் சவாலான கால கட்டத்தை அனுபவித்து வந்தது, இது மக்களின் வாழ்க்கையில் பேரழிவுகரமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

நமது நாடாளுமன்றத்தை ஆக்கிர மிக்கும் முயற்சிகளால் நமது ஜன நாயக மரபுகள் கூட அச்சுறுத்தலுக்கு உள்ளாகின. இருந்தபோதிலும், ஆழமாக வேரூன்றிய மற்றும் உறுதியான ஜன நாயக மரபுகள் காரணமாக ஜனநாயக அரசியல் அதிகார மாற்றத்தை ஏற் படுத்துவதில் நாங்கள் வெற்றி பெற்றோம்.

ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய உர நன் கொடை பொருளாதாரம் மீட்சிக்கும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவ தற்கு எமக்கு உதவியது.

பொருளாதாரம், நிதி, நிறுவன மற்றும் நல்லிணக்கம் ஆகிய துறைகளில் நான் தொடங்கிய சீர்திருத்தங்கள் ஒருபுறம் மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே நம்பிக்கை மற்றும் நம்பிக் கையை மீளக் கட்டியெழுப்புவதை நோக்க மாகக் கொண்டவை. மறுபுறம், பொரு ளாதார ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சிக் கான அடித்தளத்தை உருவாக்கு வதாக அமைகின்றது.

இலங்கையர்கள் தங்கள் அன்றாட வாழ்வில் இந்த நடவடிக்கைகள் சாதக மான விளைவுகளையும் ஏற்படுத்தி யுள்ளதோடு, நாட்டின் முன்னேற்றம் குறித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நம்பிக்கையின் மறுமலர்ச்சியையும் உருவாக்கியுள்ளது.

தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததிக்கு சமாதானம், சுபீட்சம் மற்றும் நல்லிணக்கத்தின் எதிர்காலத்தை உறுதி செய்து, நாட்டின் அனைத்து பகுதிகளி லும் உள்ள இலங்கை சமூகத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் பயனளிக்கும் நிலைபேறான மற்றும் நிலையான மீட்சி மற்றும் வளர்ச்சியை நோக்கி நாட்டை வழிநடத்துவதே எனது நோக்கமாகும். இந்த இலக்கை அடைவதில், எங்களு டைய சொந்த மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு, நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு கிடைக்குமென்பது எனது நம்பிக்கையாகும்.

ஐ.நா.வின் 80 ஆவது ஆண்டு நிறைவை நோக்கி, 2024ல் எதிர்கால உச்சிமாநாட்டிற்குத் தயாராகும் போது, பிளவுபட்ட அரசியல் புவிசார் கருத்திய லொன்றை காண்கிறோம். புதிய பூகோள அதிகார மையமொன்று தோன்றி வருவதையும் நாம் காண்கிறோம்.

இந்த மாற்றத்துடன், ஒருபுறம் மக்கள் வறுமையிலிருந்து சுபீட்சத்தை நோக்கிச் செல்வதோடு அதன்படி அபிவிருத்தி மற்றும் மானிட முன்னேற்றம் குறித்த பெரும் எதிர்பார்ப்புகள் உருவாகியுள்ளன.

மறுபுறம், தரைமார்க்கமாகவும் சமுத் திர ரீதியாகவும் தோன்றியுள்ள பாரிய சக்திகளின் போட்டிகளும் புவிசார் அரசி யல் பதட்டங்களும் வெளிப்படையான போர் சூழலை உருவாக்கியுள்ளது.

தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான முன்னேற்றங்கள் மனித நல்வாழ்வை மேம்படுத்தும் பல பயன்பாடுகளுக்கான சாத்தியக்கூறுகளுடன் அறிவு மற்றும் செல்வத்தை உருவாக்குவதில் எல்லை யற்ற புதிய எல்லைகளை வழங்கு கின்றன.

ஆரம்ப காலங்களை விடவும் தற்போது உலகிலுள்ள பாதுகாப்புக் கூட்டணி கள் தற்போது விரிவடைந்துள்ளதுடன், அவற்றுக்கு முகம்கொடுக்க பழைய மற்றும் புதிய சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப மூலோபாயங்கள் உருவாகிவருகின்றன.

டிஜிட்டல் பிளவு, நிதி மற்றும் கடன் நெருக்கடி மற்றும் வலுசக்தி மூலங்க ளின் மாற்றங்கள் ஆகியவற்றுடன் வடக்கு-தெற்கில் நிலவும் பிரிவுகள் விரிவடைகின்றன.

2030 இன் வாக்குறுதிக்கு மாறாக, பல தசாப்தங்களாக காணப்படாத வறுமை மற்றும் பசியின் நிலைமைகளை இன்று நாம் காண்கிறோம்.

இலங்கை போன்ற உலகளாவிய தெற்கின் நடுநிலையான, அணிசேரா நாடுகள் புதிய உலகளாவிய செல்வந்த நாடுகளின் முன்னிலையில் மீண்டும் வரையறைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதற்கு மேலதிகமான நடந்த அண்மைய பிர கடனங்களில், நாம் முகம்கொடுக்க வேண்டிய சவால்கள், நாட்டின் எல்லை கள் மற்றும் பிற அனைத்து பிளவுக- ளும் அதிகரித்து வருகின்றமையை காண முடியும்.

எதிர்கால சந்ததியினரை உள்ளடக்கிய எதிர்காலத்தை கட்டியெழுப்ப நாம் ஒன் றிணைவதற்கான வாய்ப்பை உருவாக் கிக்கொள்ள வேண்டும்.

இந்த ஆண்டு பொதுச் சபை விவாதத் தின் கருப்பொருளான “நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலக ளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக குதல்” தற்போதைய உலகளாவிய நெருக்கடிகளுக்கான எடுத்துக்காட்டாகும்.

இந்த ஆண்டு, ஐ.நா. சபை கூட்டத் தொடருக்கு இணையாக நடைபெற்ற, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை விரைவுபடுத்துதல், அபிவிருத்திக்கான நிதியியல் மற்றும் காலநிலை மாநாடு உள்ளிட்ட 3 மாநாடுகளில் இலங்கை பங் கேற்றுள்ளது. அங்கு இதற்கு இணையாக செயற்பட சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் கூட்டு நடவடிக்கை தேவை என்பதை நாங்கள் ஒப்புக்கொண்டோம்.

எல்லை தாண்டிய நிதித் அழுத்தங்கள், காலநிலை மாற்றம் மற்றும் தொற்றுநோய் போன்ற எமது நெருக்கடிகள் மூலம், எமது நாட்டைப் போன்ற சிறிய கடன்நெருக் கடிக்கு ஆளாகியுள்ள நாடுகளின் திறனை நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் காலநிலை தழுவல் மற்றும் தணிப்பு ஆகியவற்றில் முன்னேற்றம் அடைய தடையாக உள்ளது.

உலக வல்லரசுகளுக்கிடையிலான மோதல்கள் மற்றும் பதட்டங்கள் பொரு ளாதார மற்றும் நிதி ஸ்திரத்தன்மைக்கு நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்தல் விநியோகச் சங்கிலிகளை சீர்குலைத்து பணவீக்கம் மற்றும் உணவு, வலுசக்தி பாது காப்பின்மையை ஏற்படுத்தல் போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் கொள்கைகளை தயாரிக்க கூடிய சூழ்நிலைகளை மேலும் சிக்கலாக்குகி றது.

நிலைபேறான அபிவிருத்தி இலக்கு களுக்கு நீண்ட காலத்திற்கு முன்பே இலங்கை ஏனைய நடுத்தர - வருமான நாடுகளை விட உயர் தரவரிசைப்படுத் தக்கூடிய உயர்ந்த மானிட மற்றும் சமூக வளர்ச்சிக் குறிகாட்டிகளை அடைந் துள்ளோம்.

பூகோளத்தின் மீதான தனது பொறுப்பை இலங்கை தட்டிக்கழிக்கவில்லை. கடந்த ஆண்டு எங்கள் காலநிலை இலட்சியத் திட்டத்தை கோடிட்டுக் காட்டினோம்.

2030 ஆம் ஆண்டுக்குள் மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்க வலுசக்தியடாகப் பெறுவோம், வனப் பரப்பை 32% அதிகரிப்போம், பசுமை வாயு வெளியேற்றத்தை 14.5% குறைப் போம் என்று கூறினோம். 2040 இல் நிலக்கரிப் பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைத்து, 2050 இல் காபன் நிகர பூஜ்ஜியத்தை அடைய எதிர்பார்த்துள் ளோம்.

எங்களின் குறைந்த கார்பன் வளர்ச்சிப் பாதை, குறைந்த நடுத்தர வருமான நாடுகள், நாட்டிற்கான தனிநபர் கார்பன் உமிழ்வு விகிதங்களில் மிகக்குறைந்த ஒன்றாகும்.

**(எட்டாம் பக்கம் பார்க்க)**

**ஜனநாயக அரசியல்...**

**(ஏழாம் பக்கத் தொடர்ச்சி)**

இந்த வருடம், முகம்கொடுக்க வேண்டி ஏற்பட்ட பொருளாதார சவால்கள் மற்றும் கடன்களின் விளைவாக, ஒரு நாடு என்ற வகையில் நாம் அடைய எதிர்பார்த்த அபிவிருத்தி வளர்ச்சி வேகத்தை எம்மால் அடைய முடியவில்லை.

உணவுப் பற்றாக்குறை, பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மத்தியில் உணவுப் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றது.

அதே நேரத்தில் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளின் கல்வி மற்றும் போசாக்கு நிலைமை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இலங்கையில் கடந்த சில வருடங்களாக் காணப்பட்ட மிக வறண்ட காலநிலை காண முடிந்தது.

சீரற்ற காலநிலையின் விளைவாக, சுத்தமான வலுசக்தி, உணவுப் பாதுகாப்பு, குடிநீரைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் நமது விவசாயிகளின் வாழ்வாதாரம் ஆகியவற்றுக்கான நமது உறுதிப்பாட்டில் பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து நாம் மீள ஆரம்பிக்கும்போது, இந்த நிலைமை எமது நிதி தேவைகளை அதிகரித்துள்ளது.

காலநிலையால் பாதிக்கப்படக்கூடிய அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற வகையிலும், கடன் நெருக்கடியில் இருப்பதாலும், காலநிலை நிதியைத் திரட்டுவதற்கான அவசரம் முன்பை விட இன்று அதிகமாக உள்ளது.

காலநிலை நிதியியலை செல்வந்த நாடுகள் வாக்குறுதிகளை வழங்கியிருந்த போதிலும் அதனை தற்போதுவரையில் பூர்த்தி செய்யப்படவில்லை.

பொதுவான பங்களிப்பாக கருதக்கூடிய மற்றும் இழப்பீடு வழங்குதல் போன்றவற்றுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் அவர்களின் பங்களிப்புகளை வழங்கி அவர்கள் ஒப்புக்கொண்டதை நிறைவேற்ற வேண்டும்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் வெற்றியை உறுதி செய்வதற்கும், காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை மாற்றியமைப்பதற்கும் தேசிய முயற்சிகள் மாத்திரம் போதாது.

சர்வதேச நிதிக் கட்டமைப்பை மீள் கட்டமைக்க உலகளாவிய ஒற்றுமையின் தேவை மிக முக்கியமானது.

பல உலகளாவிய சபைகளில் இது உறுதியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுச்செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை துரிதப்படுத்தும் வேலைத் திட்டத்தின் மூலம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்ளல், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுதல் மற்றும் கடனாளிகள் இறையாண்மை மற்றும் தனிப்பட்ட கடன் நெருக்கடியைத் தணிப்பது உட்பட சர்வதேச நிதி நிறுவனங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டிய உறுதியான தலையீடுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளை எடுத்துக்காட்டுகிறது.

2008 நிதி நெருக்கடி அமெரிக்கப் பொருளாதாரத்திற்கு 4 டிரில்லியன் அமெரிக்க டொலர்கள் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீடாகும். 2020 முதல் 2024 வரை அமெரிக்கப் பொருளாதாரத்தில் தொற்றுநோயின் தாக்கம், 14 டிரில்லியன் டொலர்களை எட்டும் என்று அமெரிக்காவின் அண்மைய ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

உலகப் பொருளாதாரத்தின் ஏனைய பகுதிகளையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கும்.

நமது நவீன வரலாற்றில் இதற்கு முன் இந்த அளவு பொருளாதார நெருக்கடியை நாம் சந்தித்ததில்லை.

இன்றைய அமெரிக்க டொலர் பெறுமதியில் கூறப்போனால் இரண்டாம் உலகப் போரின் பாதிப்பு 04 டிரில்லியன்களாகும். ஐரோப்பிய மீட்புத் திட்டத்தின் பெறுமதி 150 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும் ஆகும்.

உலகளாவிய நிதி ஒழுங்கை மறுசீரமைக்க முடியாவிட்டால், காலநிலை மாற்றத்தை மாற்றியமைக்கும் முயற்சியிலும் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான போராட்டத்திலும் நிச்சயமாக நாம் தோல்வியடைவோம். நெருக்கடி உச்சத்தை எட்டாததால் இந்த விடயங்களை மறுசீரமைக்க இன்னும் கால அவகாசம் உள்ளது.

புதிய உலகளாவிய நிதி ஒப்பந்தத்திற்கான பாரிஸ் உச்சி மாநாட்டின் மூலம் இதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படும். எனவே, எதிர்கால உச்சி மாநாடு புதிய திட்டங்களை உருவாக்காமல், காலநிலை மாற்றம் மற்றும் நிலையான வளர்ச்சியின் தேவைகளுக்கு ஏற்ப தற்போதைய நிதி கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டும்.

அதன்படி இந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள மேல்குறிப்பிட்ட விடயங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். எமது இலக்குகளை அடைவதற்கு நிலவுகின்ற பிளவுகளை தடையாக எடுத்துக்கொள்ள கூடாது.

“பிரிட்ஜ்டவுன் முயற்சி” மற்றும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளின் கடனைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் போன்ற முக்கிய பிரச்சினைகள் இந்தச் சபையில் விவாதிக்கப்பட்டாலும், அதற்கு உரிய கவனம் செலுத்தப்படுவதில்லை.

துரதிர்ஷ்டவசமாக, காலநிலை மாற்றம், கடன் நிவாரணம் மற்றும் நிலையான வளர்ச்சி ஆகிய இந்த இணைக்கப்பட்ட பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்க பாதுகாப்பு சபையும் தவறிவிட்டது. இது மனிதகுலத்தின் எதிர்காலத்தை பாதிக்கிறது.

பூமியைபாதுகாப்பதேஎமதுமுன்னுரிமையாக இருக்க வேண்டும், பிளவுகளுடன் போருக்கு நாம் செல்ல முடியாது. இந்த நெருக்கடிகளை நிறைவு செய்துகொள்ளும் வரை ஒவ்வொருவருக்கும் இடையில் நிலவுகின்ற போட்டிகளை ஒதுக்கி வைக்கும் இயலுமையிலேயே உலகின் அனைத்து உயிரினங்களின் எதிர்காலமும் தங்கியுள்ளது.

கடந்த நூற்றாண்டின் உலகத்தைப் பிரதிபலிக்கும் பலதரப்பு பொறிமுறைகள், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் சவால்களைச் சந்திக்க சீர்திருத்தப்பட வேண்டும், இது நீண்டகால பலஸ்தீன பிரச்சினைக்கு தீர்வு காணத் தவறிய பொறிமுறையாகும்.

தற்போதைய உலகளாவிய பன்முகத் தன்மை மற்றும் முடிவெடுக்கும் பிரதிநிதிகளாகபாதுகாப்புசபையின்கட்டமைப்பு விரிவாக்கப்பட வேண்டும். இதற்கு இணையாக, ஐ.நா பொதுச்சபையின் வகிபாகம் பலமாக இருக்க வேண்டும்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்கள் என்ற வகையில் நம்பகமான உரையாடலில் ஈடுபட வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். இது அடுத்த அமர்வுகளுக்கு முன்னதாக இந்த அச்சுறுத்தல்களை எதிர்த்து ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு வழிவகுக்கும்.

வறுமை மற்றும் காலநிலை சவால்களைப் போக்க நாம் ஒற்றுமை மற்றும் நிதியுதவியை நாடும் அதே வேளையில், உலகளாவிய இராணுவச் செலவுகள் இன்று 2.24 டிரில்லியன் டொலர்களை எட்டியுள்ளது.

கடந்த காலத்தில் கட்டமைப்பில் ஸ்திரத்தன்மையை பராமரிப்பதில் கருவியாக இருந்த சக்திவாய்ந்த, முக்கிய ஆயுதக் கட்டுப்பாட்டு கட்டமைப்பு சரிவடைந்துள்ளதால், அதனால் அணுசக்தி மோதல்கள் தொடர்பிலான திறந்த விவாதத்தில் எழுந்துள்ளன. இந்த நிலைமை தற்போதைய உலக அதிகாரம் மிக்கவர்களுக்கிடையில் மூலோபாய ரீதியாகவும் தமக்கிடையில் நம்பிக்கையின்மையையும் எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய மோதலை அதிகரிக்க வழிவகுக்கும் இராணுவ செலவினங்களை அதிகரிப்பதை கட்டுப்படுத்துமாறு நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பல தசாப்தங்களாக இந்த விடயத்தில் நல்லறிவு மற்றும் பகுத்தறிவின் குரலாக இருந்து வருகின்றன. பேரழிவு ஆயுதங்கள் மற்றும் அணு ஆயுதங்களை நிராயுதபாணியாக்குவதை ஆதரிக்கும் இலங்கையின் நீண்டகால நிலைப்பாட்டிற்கு இணங்க, இந்த ஆண்டு இலங்கை விரிவான சோதனை தடை ஒப்பந்தத்தை அங்கீகரித்துள்ளது. நேற்று, அணு ஆயுதங்களை தடை செய்வதற்கான ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்றுக்கொண்டோம்.

சர்வதேச வர்த்தகம் முதல் சமுத்திர நிர்வாகம் வரை பல தசாப்தங்களாக பலதரப்பு பேச்சுவார்த்தைகளில் உருவாக்கப்பட்ட சர்வதேச விதிகள் அடிப்படையிலான ஒத்துழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட பகுதிகளுக்கு பாரிய பலமான பதட்டங்களும் பரவும் வேகத்தை நாம் நிறுத்த வேண்டும்.

சர்வதேசம் இன்று பாரிய மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளது. அதே சமயம், வரலாறு காணாத சவால்களை எதிர்கொண்டுள்ளது. அதனால் முன்னெப்போதும் இல்லாத சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொதுவான தீர்வுகளை அடைவதில் ஒற்றுமையை வெளிப்படுத்த ஐக்கிய நாடுகள் சபைக்கு வருகிறோம். ஆபத்தில் இருப்பது நமது பூமியின் மொத்த எதிர்காலமே அன்றி, ஐக்கிய நாடுகள் சபையின் எதிர்காலம் அல்ல,

சர்வதேச உறவுகளில் ஊடுருவியுள்ள அவநம்பிக்கை, அதிகரித்துள்ள போதிலும் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான புதிய வழிகளைக் கண்டறிய வேண்டும்.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் ஒற்றுமையுடன் இணைந்து பணியாற்றுவதற்கான நிரந்தர உறுப்பினர்களின் விருப்பத்தின் மூலம் இதை எட்டமுடியும்.” - என்றார்.




# சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு ஊர்வலம்

**(ஹஸ்பர்)**

திருகோணமலை எகெட் கரிட்டாஸ் நிறுவனத்தால் இன்று வெள்ளிக்கிழமை (22) காலை 9 மணிக்கு சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கில் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை என்ற கருப்பொருளில் எகெட் கரிட்டாஸ் அலுவலகத்தில் இருந்து ஆரம்பமான விழிப்புனர்வு ஊர்வலம் ஆளுநர் அலுவலகம்வரை இடம் பெற்றது .




## சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம்

**(த.சுபேசன்)**

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் நாளை மறுதினம் (24) ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ் வீதி, இணுவிலில் அமைந்துள்ள சங்க அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது 2024ஆம் ஆண்டுக்கான பரீட்சை தொடர்பான விடயங்கள், சங்கத்தின் செயற்பாடுகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கத் தலைவர் சி.கா.கமலநாதன் தெரியப்படுத்தியுள்ளார்.

## ‘எழுகை’ பயிற்சிப் பட்டறை நாளை திருகோணமலையில்

**(ஹஸ்பர்)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை மாவடத்தின் எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்களின் வாண்மையை விருத்தி செய்யும் நோக்கில் , “எழுகை” என்னும் பெயரில் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

நாளை 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு திருகோணமலை, உப்புவெளியில் அமைந்துள்ள கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக்களத்தில் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் ச.நவநீதன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள உயர்கல்வி நிறுவனங்களான தென்கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் திருகோணமலை வளாகம் ஆகியவற்றின் சிரேஸ்ட விரிவுரையாளர்களுடன், கலை இலக்கியத்துறைசர் ஆளுமைகள் வளவாளர்களாகக் கலந்து கொள்வர்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட கலை, இலக்கிய மன்ற உறுப்பினர்கள் மற்றும் துறைசார் இளம் கலைஞர்கள் 70 பேர் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்றவுள்ளனர்.



# ஆயுள்வேத ஆஸ்பத்திரிகளில் பதவியுயர்வு நியமனங்கள்

(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கீழுள்ள ஆயுள்வேத வைத்தியசாலைகளில் பல்வேறு பதவிகளில் கடமையாற்றி வந்தவர்களில் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நடத்தப்பட்ட மர்த்தனர் போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த 17 பேருக்கான பதவியுயர்வு நியமனங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதர் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் (19) இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதியாக கலந்து கொண்டு, உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வு நியமனங்களை வழங்கினார்.

இந்தப் பதவியுயர்வு நியமனங்களை அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த 07 பேரும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 07 பேரும், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த 03 பேரும் பெற்றுக் கொண்டனர். இதில் ஆண் மர்த்தனர் 12 பேரும், பெண் மர்த்தனர் 05 பேரும் பெற்றுக்கொண்டனர்.




# வாழ்வாதார உதவிகள் வழங்கல்

(வி.ரி.சகாதேவராஜா)

பெரெண்டினா நிறுவனத்தால் வாடிக்கையாளர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வு கல்முனை கிளையின் ஏற்பாட்டில் நாவிதன்வெளி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று (21) வியாழக்கிழமை இடம்பெற்றது.


இந்த நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். வாடிக்கையாளர்களுக்கான வாழ்வாதார உதவி கொடுப்பனவுகளையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பெரெண்டினா நுண்நிதி நிறுவன பிரதேச முகாமையாளர் பா.பிரதிலிபன், பெரெண்டினா நிறுவனத்தின் கல்முனை முகாமையாளர் கே.கோபிகரன், வியாபாரஅபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜெயரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதற்கட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கும் இந்த நிகழ்வில் 50 பயனாளிகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 1550 பயனாளிகளுக்காக மொத்தமாக சுமார் 5.5 மில்லியன் ரூபா நிதி நாவிதன்வெளி மற்றும் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஆங்கில கல்வியின் அவசியம்...




இன்றைய விருத்தியடைந்த நவீன யுகமானது பல்வேறு வகையில் மேம்பாடுடையதாக நகர்கின்றமையால் மொழியும் அவற்றுடன் பல மாற்றங்களுக்கும் கையாளுகைகளுக்கும் உட்பட்டு அபிவிருத்தி அடைந்து வருகின்றது. அந்தவகையில் ஆங்கில மொழியும் வளர்ந்துவரும் மொழிகளில் பிரதான அங்கம் வகிக்கின்றது.

அபிவிருத்தி அடைந்த நாடுகளில் ஆங்கில மொழி பிரதான மொழியாகவும் அதிகம் பேசப்படும் மொழியாகவும் காணப்படுகின்ற அதேவேளை வளர்முக நாடுகளில் குறிப்பாக இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் ஆங்கில மொழியானது நோக்கம் கருதி பேசப்படும் மொழிகளுள் ஒன்றாகவே காணப்படுகின்றது.

இலங்கையைப் பொருத்தமட்டில் ஆங்கில மொழியானது இரண்டாம் மொழியாக விளங்குவதுடன் ஆங்கிலம் தரமான மொழியாக காணப்படுவதுடன் மக்கள் மத்தியில் குறைவாக பேசப்படும் மொழியாகவும் சற்று கவனயீனம் நிறைந்த மொழியாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு நாட்டின் கல்வியானது அடுத்தகட்ட வளர்ச்சியைச் சர்வதேச அளவுக்கு உயர்த்தும் என்ற அடிப்படையில் இலங்கையின் கல்வி உயர்வானதாகவும் தரமானதுமாக இருந்த போதும் ஆங்கிலக் கல்வி சற்றுச் சவாலாகவே உள்ளது என்பது உண்மையே. ஆங்கில மொழியானது ஒரு சர்வதேச மொழியாக கருதப்படும் இன்றைய தகவல் தொழிநுட்ப யுகமாம் 21 ஆம் நூற்றாண்டில் சமூகத்தின் திறவுகோலாக காணப்படுகின்றது.

இலங்கையின் வரலாற்று பின்னணியை நோக்கும்போது, பிரித்தானியரது காலணித்துவ ஆட்சிக்காலம் ஒரு மறக்கப்படாத பதிவாகவே காணப்படுகின்றது. இதன் விளைவால் காலணித்துவத்துக்கு உட்பட்டிருந்த நாடுகள் அரசியல், பொருளாதாரம், சமூகம் என பல கோணங்களில் வளர்ச்சி நிலையை கண்டிருந்தது.

காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த போது, ஆங்கிலம் அரச கரும மொழியாகவும், வேலை வாய்ப்புகள் ஆங்கிலம் தெரிந்த நபர்களுக்கு வழங்கப்பட்டதுடன் கட்டாயத்தின் பேரில் ஆங்கில மொழியை கற்றல் போன்ற நடவடிக்கைகளின் பேறாக ஆங்கிலம் காலணித்துவ நாடுகளுக்கு புகுத்தப்பட்டது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான சூழலிலே ஆங்கிலம் படிப்படியாக வளர்ச்சியடைந்து இன்று அத்தியாவசிய மொழி பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

உலகமயமாக்களின் கீழ் அனைத்து நாடுகளும் ஒருசேர பயணப்படுவதுடன் அரசு, சமூகம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த செயற்பாடுகளில் கூட்டு சேர்ந்து செயற்படுவதால் ஆங்கில மொழியானது இலங்கையைப் பொறுத்தமட்டில் மிகப்பெரும் சவாலாகவே மேலெழுந்துள்ளது.

இலங்கையில் பொதுவாக பாடசாலைகளில் ஆங்கில பாடம் காணப்பட்டாலும் சில அரசாங்க, தனியார் பாடசாலைகளில் மாத்திரமே ஆங்கில மொழி மூலம் கற்கைகள் வழங்கப்படுகின்றன. ஆங்கிலம் என்றாலே ஆச்சரியத்துக்கு உரிய ஒரு மொழியாக காணப்படுகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது, இலங்கையில் ஆங்கில அறிவு சற்று கீழ் மட்டத்திலேயே உள்ளது.

ஆங்கில மொழியை அறிவுக் கண் கொண்டு பாராது தனித்துவமான மொழியாக பார்ப்பதால் மக்கள் பயந்து அதனை அறிந்து கொள்ள பின்வாங்குகின்றமையாலே இலங்கையில் தொடர்ந்து ஆங்கிலம் புறந்தள்ளப்படும் மொழியாக இருந்து வருகின்றது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 2018 ஆம் ஆண்டின் கணிப்பு படி 48 வீதமான மக்கள் மத்தியிலேயே ஆங்கிலம் சரளமாக பேசப்படுவதுடன் இவை பெரும்பாலும் நகர்புறவாழ் மக்கள் மத்தியில் பேசப்படுவதாகக் காணப்படுகின்றது. அதுவும் வர்த்தகம் மற்றும் அதிகார பூர்வம் ஆகிய நோக்கங்களின் பேரிலேயே பேசப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய நவீன யுகத்தில் ஒவ்வொரு மனிதனும் சமமாக மதிக்கப்படுவதற்கு ஆங்கில அறிவு முக்கிய பங்கு வகிக்கின்றது.

அந்த வகையில், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும் ஆங்கில மொழியானது அவசியமான ஒன்றாகக் காணப்படுகின்றது.

ஆங்கில மொழியானது அதிகம் தேவைப்படுவதாக உள்ளது. உலகளாவிய ரீதியில் தொழில் வாய்ப்புகள் யாவும் ஆங்கில அறிவை மையப்படுத்திய விதத்திலே காணப்படுகின்றது. வணிக நிலையங்கள் நிலையங்களில் பெரும்பாலும் ஆங்கில அறிவு உடையவர்களையே நியமிக்கின்ற போக்கும் காணப்படுகின்றது.

அத்தோடு, அறிவுத் திறன் விருத்திக்கு ஆங்கில மொழியானது அவசியமான ஒன்றாக காணப்படுகின்றது. வெளிநாடுகளில் பட்டப் படிப்புகளுக்காகவும் வேலை வாய்ப்புக்காகவும் செல்கின்ற போது ஆங்கில அறிவு இருக்கும் பட்சத்திலே மக்கள் மத்தியில் அவர்களுக்கான மதிப்பு வழங்கப்படுகின்றது. இவ்வாறாக ஒரு தனி மனிதனது அங்கீகாரத்துக்கு ஆங்கில மொழியானது அவசியப்பாடாகக் காணப்படுகின்றது.

இலங்கையில் ஆங்கிலக் கல்வி முறையானது கீழ் நிலையில் இருப்பதுக்கான பல தடைகள் காணப்படுகின்றன. அந்த வகையில், தகுதி வாய்ந்த ஆங்கில ஆசிரியர்களின் பற்றாக் குறையான சூழலே அதிகம் நிலவுகின்றது. பெரும்பாலும் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிங்களம் பேசும் ஆசிரியர்களாக இருப்பதால் தமிழ் பேசும் மாணவர்கள் ஆங்கிலத்தைப் புரிந்து கொண்டு கற்பதில் சிக்கல் தன்மை நிலவுகின்றது. மிகவும் பின் தங்கிய பாடசாலைகளைப் பொறுத்தமட்டில் அங்கு ஆங்கில ஆசிரியர்கள் இருப்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

இருக்கும் ஆசிரியர்களும் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர்களாக இருப்பதில்லை. “மேல் மாவட்டம் ஆங்கிலக் கல்வி சற்று கவனம் எடுக்கப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஆங்கில கல்வியின் அவசியம்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் கற்பிக்கப்பட்டாலும் மலையக பாடசாலைகளை பொருத் தமட்டில் ஆங்கில கல்வியானது மிகவும் தாழ் நிலையில் இருப்பதற்கு இதுவே காரணம்" என்றும் குறிப்பிடலாம்.

இதனால் ஆங்கிலம் இன்னுமே பின்னடைவான நிலைக்கே செல்கின்றது. வர்த்தக செயற்பாடுகள் யாவும் ஆங்கில திறன் கொண்டவர்களை மையப்படுத்தியே மேற்கொள்ளப் படுவதால் இங்கு ஆங்கில அறிவு அற்றவர்களை வர்த்தக செயற்பாடுகளுடன் இணைத்துக் கொள்வதில் வர்த்தக நிறுவனங்கள் ஈடுபாடு கொள்வதில்லை. இதனால் வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுவதுடன் தொடர்ந்து வறுமையும் நிலவுவதற்கு இந்த ஆங்கில மொழி அறிவின்மையும் ஒரு காரணமாக உள்ளது.

அதுமாத்திரமன்றி ஆங்கில மொழி கற்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. இதனால் வெளிநாடுகளுக்குச் சென்று கல்வி பயில முடியாத நிலையும் ஏற்படுகின்றது. அத்தோடு ஆங்கில மொழி அறிவு இன்மையால் புறந் தள்ளப்படுகின்ற போது அது மன அழுத் தத்தையும் தோற்றுவிக்கக் கூடும்.

பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுவதில் இருந்தும் புறந் தள்ளப்படுவதுடன் சிறந்த தொழில் வாய்ப்புகள் கிடைப்பதும் சவாலாகவே உள்ளது.

நவீன உலகில் ஆங்கிலம் ஆதிக்கம் பெற்ற மொழியாக காணப்படுவதால் அதனை அணுக முடியாத சூழல் பின் தங்கிய மக்களிடையே அதிகம் காணப்படுவதுடன் உலகமயமாக்கல் செயல்பாடுடன் இணைந்து பயணிக்க அசாதாரண சூழ்நிலையும் தொடர்ந்து ஆங்கில மொழி அறியாமையால் ஏற்படுகின்றது. ஆங்கில மொழி அறிவு பற்றிய பூரண கவனம் மக்கள் மத் தியிலே செலுத்தப்படாத காரணத்தி னாலும் அதற்கான பல வாய்ப்புகள் இன்மையாலும் ஆங்கில மொழிக்கான கற்றல் பெரும் சவாலான பின் விளைவுகளையும் ஏற்படுத்துவனவாகவும் அமைந்து விடுகின்றது.

ஆங்கில கல்வி முறையானது பின் னடைவான சூழலில் தொடர்ந்து நிலைத்திருப்பதை தவிர்க்கும் பொருட்டு அதன் தடைகளில் இருந்து விடுபட்டு பல மேம்பாட்டு திட்டங்களை மேற் கொள்வது ஆங்கில அறிவை விரிவு படுத்துவதற்கு உதவுவதாக அமை யக்கூடும். அந்த வகையில், "வள பற்றாக்குறை நிலவும் பாடசாலைக ளுக்கு அவற்றை நிவர்த்தி செய்வது அரசின் கடமை. இந்த அடிப்படையில் பின் தங்கிய பாடசாலைகளை இனங் கண்டு அங்கு மாணவர்களுக்குத் தேவையான வளங்களை சமமாக பகிர்ந்தளிப்பதுடன் ஆங்கில அறிவை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் அமுல்படுத்த வேண்டும்".

ஆங்கில அறிவானது தமிழ் மொழியைப் போன்று எம்மோடு கலந்த ஒரு மொழி அன்று ஆகையால் தொடர்ந்து ஆங்கில மொழியைப் பயிற்றுவிப்பது அவசியப்பாடாகக் காணப்படுகின்றது. எனவே ஆரம்பக் கல்வியில் இருந்து அதாவது, பாலர் பாடசாலைகளில் இருந்தே ஆங்கில கல்வி முறையானது மாணவர்களுக்கு பயிற்றுவிப்பதுடன் அதில் ஆர்வம் உண்டாக்கும் வகையிலான பாடத் திட்டங்களையும் கற்றல் முறைகளையும் பின்பற்றுவதன் ஊடாக சிறுவயதில் இருந்தே ஆங்கிலக் கல்வி தொடர்பான அறிவு மேம்படுவதற்கு வாய்ப்பாக அமையும்.

அத்தோடு எல்லா மாணவர்களும் ஆங்கிலக் கல்வியை அணுகும் வகையில் கல்வி நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டு வருவதுடன் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தனித்துவமாக ஆங்கில மொழிக்கான பயிற்றுவித்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். தனியார் நிறுவனங்களில் ஆங்கில மொழி கற்பிக்கும் போதும் அங்கு அதிகளவில் பணம் செலுத்தி கற்றலை தொடர வேண்டிய கட்டாயம் இருப்பதால் அக்கல்வியை அணுகு வதற்கான வாய்ப்பு அனைவருக்கும் கிடைப்பதில்லை.

எனவே பணத்தை மையப்படுத்திய ஆங்கிலக் கல்வி நெறிமுறையைப் பயிற்றுவிப்பதைத் தவிர்த்து அறிவை வழங்கும் நோக்குடன் கல்வி நிறு வனங்களும் செயற்பட வேண்டும். அறிவு படைத்த ஆங்கில ஆசிரியர்களை பாடசாலைகளில் உள்ளீர்ப்பதுடன் ஆசிரியர்களுக்கு ஆங்கில பயிற்று விப்புகளும் கற்பித்தல் முறையையும் வழங்குவதில் கல்வி அமைச்சு கவனம் எடுத்தல் வேண்டும்.

வளர்ந்து வரும் தொழில்நுட்பத்துக்கு அமைய ஆங்கில மொழியை அணு குவதற்கான சூழலை அனைவருக்கும் விழிப்புணர்வு மிக்கதாக மாற்றி அமைக்க வேண்டும். கற்றலுக்கு அமைவான சூழலை உருவாக்கிக் கொடுத்தல் அவசியம். அத்தோடு வகுப்பறையில் தொடர்ந்து ஆங்கில மொழி சார்ந்த செயல்பாடுகள், தொடர்பாடல்கள் இடம்பெறுவதும் ஆங்கில மொழி பயில்வதற்கு இலகு வாக அமையும்.

நாளாந்தம் வாராந்தம் மாதாந்தம் தொடர்ந்து ஆங்கில மொழியிலான நிகழ்ச்சிகளை உள்ளீர்த்து மன்றங் களை நடத்துவதும் ஆங்கில கல்வி முறை மேம்பாட்டுக்கு உதவக் கூடியதாக அமையும்.

வெறுமனே பாடசாலைகளில் மாத் திரம் ஆங்கிலக் கல்வி மேம்பாடு குறித்து கவனம் செலுத்துவதைத் தவிர்த்து வெளிச்சூழலில் உள்ள சமூகத்தினரும் ஆங்கில மொழி சார்ந்த அறிவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்களுக்கும் ஆங்கில பயிற்சி நெறி முறைகளை பயிற்றுவிப்பது அவசி யமாகஉள்ளது. அது சமூக ஏற்றத் தாழ்வுகளை இல்லாது ஒழித்து அனை வருக்கும் சம வாய்ப்பையும் வேலை வாய்ப்பையும் பெற்றுக் கொடுப்பதாக அமையக்கூடும்.

இலங்கையை பொறுத்தமட்டில் ஆங்கில கல்வி மேம்பாட்டுக்காக கல்வி அமைச்சு கவனம் எடுத்து பல செயல்திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. அந்தவகையில் இலங் கையில் ஆங்கில மொழியை மேம் படுத்தும் நோக்கில் பாடசாலைகளில் வாரத்துக்கு ஒரு தினம் பாடசாலை நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் மேற்கொள்ளப்படுவதற்கு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் திட்டம் வகுத்திருந்தார்.

ஆங்கில மொழியை உயர்த்து வதற்கே கல்வி அமைச்சர் இந்தத் திட்டத்தை அமல்படுத்தியுள்ளார் என பதும் குறிப்பிடத்தக்கது.

கல்வி நிர்வாக சேவைகளில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கப்பெறுவதுடன் தொடர்பாடல் திறனையும் ஆளுமையும் விருத்தி செய்வதற்கு வாய்ப்பாக அமையும். சர்வதேச மட்டத்திலான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற போது ஆங்கில மொழி அறிவு உதவுவதாக அமையும். உரையாடல் மேற்கொள்வதற்கும் வேலை வாய்ப்பைப் பெற்று கொள் வதற்கும் உதவக்கூடும். அத்தோடு பல்கலைக்கழக பட்டப்படிப்பை மேற் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன.

21 ஆம் நூற்றாண்டில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியானது விருத்தி யடைந்த நிலையில் தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும் ஆங்கில அறிவு உறுதுணையாக அமைவதுடன் வெளிநாடுகளிலும் தொழில் சந்தையிலும் உயர் பதவி நிலையை வகிப்பதற்கும் ஆங்கில மொழி அறிவு உறுதுணையாக அமை யும் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை பொருத்தமட்டில் ஆங்கில அறிவு மட்டமானது கீழ் நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு அதிலிருந்து மீண்டு ஆங்கில புலமைமிக்க இலங்கையைக் கட்டி எழுப்புவதற்கான விழிப்புணர்வு செயற்பட வேண்டும்.இதற்கு ஆங்கில அறிவை இன்னுமே மேம்படுத்தும் பட்சத்திலேயே உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி அடைந்து நாடுகள் பட்டியலில் ஆங்கில மொழி ரீதியிலான பின்னடைவில் இருந்து முன்னேறு வதற்கான வாய்ப்புகள் அதிகம் கிடைக்கப் பெறும்.

**ஞா.மைக்கல் பெவன்,**
ஊடகக்கற்கைகள்
2 ஆம் வருடம்,
யாழ்.பல்கலைகழகம்.



# மினுவாங்கொடை பாடசாலைகளை அபிவிருத்தி செய்ய ஒரு கோடி ரூபா

கம்பஹா, மினுவாங்கொடை கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் நௌபர் பௌசிக்கு சொந்தமான சஹீதா பவுண்டேஷன் முன்வந்துள்ளது.

இதன்படி, மினுவாங்கொடை கல்வி வலயத்தில் உள்ள 8 பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு பவுண்டேஷன் ஒரு கோடி ரூபாவை வழங்கியது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் (20) மினுவாங்கொடை கல்வி வலய அலுவலகத்தில் இடம்பெற்றது.

மினுவாங்கொடை நில்பனாகொட மகா வித்தியாலயம், ஹொரம்பெல்ல சீலவிமல மகா வித்தியாலயம், மினுவாங்கொடை கொரச ரணசிங்க மகா வித்தியாலயம், நதகமுவ கனிஷ்ட வித்தியாலயம், ஓபாத ஸ்ரீ குணானந்த ஆரம்பப் பாடசாலை, உடுகம்பல றோமன் கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலை, உடுகம்பல ஆரம்பப் பாடசாலை மற்றும் மினுவான்கொடை அல் அமான் முஸ்லிம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இந்தத் திட்டததின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் கீழ் இப்பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

இதேவேளை கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள 34 பாடசாலைகளை நவீனமாக அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனையின் பேரில் செயல்படுத்தியுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் உள்ள பல பாடசாலைகளின் கட்டடங்கள் தற்போது பாழடைந்த நிலையில் காணப்படுகின்றன. இக்கட்டடங்களை முழுமையாக சீரமைக்க பாடசாலைகளிடம் பணம் இல்லாததால் அடிக்கடி சிறிய சிறிய சீரமைப்பு பணிகள் நடைபெறுகிறது.

இது தொடர்பில் கவனம் செலுத்திய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கம்பஹா மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளையும் உரிய முறையில் ஆய்வு செய்து அந்த பாடசாலைகளின் அபிவிருத்திக்கான திட்டத்தை தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்தார்.

நிகழ்வில் மேல்மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நௌபர் பௌசி, மினுவாங்கொடை கல்விப் பணிப்பாளர் வஜிர ரணராஜ பெரேரா, மினுவாங்கொடை பிரிவு கல்விப் பணிப்பாளர் விஜித சோமசிறி மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தமிழ் மக்களுக்கான நீதியை ஐ.நா. பெற்றுத் தர வேண்டும்!

## வளத்தாப்பிட்டி போராட்டத்தில் ஜெயசிறில்

( வி.ரி.சகாதேவராஜா)

ஸ்ரீலங்கா அரசு இன்னமும் தமிழருக்கான நீதியை தரும் என்று எதிர்பார்க்க முடியாது. அதனால் தர முடியாது .தரவும் மாட்டாது . எனவே ஐ.நா. சபை இந்த நீதியை பெற்றுத் தர வேண்டும்.

இவ்வாறு நேற்று (21) வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட வளத்தாப்பிட்டியில் இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பேசிய தமிழரசுச்சி முக்கியஸ்தரும் முன்னாள் காரைதீவு தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் அறைகூவல் விடுத்தார்.

வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் அதன் இணைப்பாளர் காத்தவராயன் காந்தன் தலைமையில் இடம்பெற்ற மக்கள் போராட்டம் நேற்று(21) வியாழக்கிழமை வளத்தாப்பிட்டியில் இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான பொது மக்கள் பதாகைகள் சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டார்கள் .

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

நீதி தேவதை கண் திறக்க வேண்டும். ஐக்கிய நாடு சபை இந்த போர்க் குற்றவாளிகளை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும். தமிழர்களின் வரலாற்று அடையாளங்கள் படிப்படியாக அழிக்கப்படுகின்றன. தமிழர் பிரதேசங்கள் தொல்லியல் என்ற போர்வையில் நில ஆக்கிரமிப்பு செய்யப்படுகின்றது.

காணாமல் ஆக்கப்பட்டதற்கான நீதி இன்னும் கிடைக்கவில்லை. மனித உரிமை மீறப்படுகின்றது. இது எல்லாம் நீதிக்கு உட்படுத்தப்பட வேண்டும் . மொத்தத்தில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும்.–என்றார்.



# சமூக சேவை அமைப்புகளின் சம்மேளனம் அம்பாறையில்

(நூருல் ஹுதா உமர் )

அம்பாறை மாவட்ட பிரதேச செயல கங்களில் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இடையிலான விசேட கலந்துரையாடல் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத் தின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் இளங்குமுதன் தலைமையில் இன்று (22) காரைதீவு பிரதேச செயலகத் தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற் றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட சமூக சேவை திணைகளத்தின் அம் பாறை மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் 19 பிரதேச செயலகத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் 19 பிரதேச செயலகங்களில் பதிவு செய்யப்பட்ட சமூக சேவை அமைப்புகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது பல முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட் டன. பதிவு செய்யப்பட்டு செயற்பாட்டில் இல்லாத அமைப்புகளை அவர்களின் பதிவைமீள் பரிசோதனை செய்து அவ் வாறான அமைப்புக்களை வலிதாக்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் கூறப்பட்டது.

அம்பாறை மாவட்ட பதிவு செய்யப்பட்ட சமூக சேவைகள் அமைப்பு மற்றும் அரச சார்பாற்ற நிறுவனங்களை உள் ளடக்கிய சம்மேளனம் உருவாக்கப்பட வுள்ளது.

இவ்வாறான சம்மேளனம் ஏற்கனவே மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து திருக்கோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் உள்ளடக்கிய சம்மேளன நிர்வாகிகளை வைத்து கிழக்கு மாகா ணத்துக்குரிய சம்மேளனம் மிக விரை வில் உறுவாக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லிணக்கக் குழுவுக்குச் செயலமர்வு

(எம் எப். நவாஸ் )

அம்பறை மாவட்ட நல்லிணக்க குழுவுக்கான இரண்டு நாள் வதிவிட செயலமர்வொன்று அண்மையில் அம்பாறை ஆரியவான் விடுதியில் சமாதானமும் சமுகப்பணியும் அமைப் பின் தேசிய அமைப்பாளர் ரீ.தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திட்ட முகாமை யாளர் ரீ.ராஜேந்திரன, திட்ட இணைப்பா ளர் என்.பாஸ்கர், திட்ட உத்தியோகத்தர் எம்.எல்.எம்.மாஜித் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்ட னர்.



# சாரண மாணவர்களின் துணிகர நடைப் பயிற்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனையில் ஸாஹிறா தேசியக் கல்லூரியில் சாரண மாணவர்களால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மலையேறும் கழகத்தின் கன்னி முயற்சியாக இரண்டு தினங்கள் கொண்ட துணிகர நடைப் பயிற்சியில் 21 சாரணர்கள் கலந்து கொண்டவர்கள்.

இந்த நடை பயணத்தை கல்லூ ரியின் அதிபர் எம்.ஐ.ஜாபிர் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் பிரதி அதிபர் எம்.எச்.எம்.அபூபக்கர், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம்.அமீர், சாரண பொறுப்பாசிரியர் மேஜர்.கே. எம். தமீம் ஆகியோர் ரகலந்து கொண் டார்கள்.

இந்த துணிகர நடைப் பயணத்தில் சாரணர்கள் இயற்கை சூழலை இரசித்தல், அறிவைச் சேர்த்தல், கடின




உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்தல், கடின வேலைகளைச் செய்யும் மன உறுதியை விருத்தி செய்து கொள் ளல் போன்ற அனுபவங்களை பெற்றுக் கொள்ள முடியும்

சாரணர்கள் இச்செயற்பாடு சம்பந் தமாக ஒரு அறிக்கையும் சமர்ப்பித்தனர்.

இதன் மூலம் மாணவர்கள் பாட சாலைக் காலங்களின் சிறந்த அனு பவத்தை பெற்று ஆளுமை விருத் தியைப் பெற்றுக் கொள்கிறமை குறிப் பிடத்தக்கது.

# சந்திரயான் - 3 விண்கலத்தின் ஆய்வுகள் மீண்டும் ஆரம்பம்!



நிலவின் தென்துருவத்தின் ஆய்வு பணிகளுக்கான இந்திய விண் வெளி ஆய்வு மையமான இஸ்ரோ அனுப்பியுள்ள, சந்திரயான் 3 விண் கலத்தின் ஆய்வு களை இன்று முதல் மீண்டும் முன்னெடுப் பதற்கு எதிர்பார்க் கப்பட்டுள்ளது.

கடந்த ஜுலை 14 ஆம் திகதி நிலவின் தென் துருவத்தின் ஆய்வு பணிகளுக்காக சந்திரயான் 3 விண்கலம் விண்ணுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையில், கடந்த ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி விண்கலத்தின் விக்ரம் லேண்டர் வெற்றிகரமாக நிலவின் தென் துருவத்தில் தரையிறக்கப்பட்டிருந்தது.

பின்னர் 14 நாட்கள் தொடர்ச் சியாக ஆய்வு பணிகள் முன்னெடுக்கப் பட்டிருந்தது. இந்த நிலையில், நிலவில் இரவு பொழுது ஆரம்பமானது.

இதனையடுத்து லேண்டர் உறங்கு நிலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில், இன்றைய தினம் நிலவில் பகல் ஆரம்பமாவதன் காரண மாக, உறங்கும் நிலையில் உள்ள லேண்டர் மற்றும் ரோவர் ஆகியவற்றின் பணிகளை ஆரம்பிப்பதற்கு எதிர்ப் பார்ப்பதாக இஸ்ரோ அறிவித்துள் ளது.

---

## சனாதன சர்ச்சைக் கருத்து:

# தமிழக அரசு, உதயநிதி ஸ்டாலினை பதிலளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு



சனாதன சர்ச்சைக் கருத்து தொடர் பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனாதன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர் கள் பங்கேற்றதால் தமிழக அரசும் பதில ளிக்கவேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சென்னையில் நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது.

'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச் சல், மலேரியா, கரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இது தேசிய அளவில் விவாதப் பொருளாகி பல்வேறு விமர்சனங்கள் எழுந்தது. மேலும், பா.ஜ.க. மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில், உதய நிதிஸ்டாலினுக்கு கண்டனம் தெரிவிக் கப்பட்டது.

இந்த நிலையில், இந்தியாவில் வாழும் கோடிக்கணக்கான இந்து மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் பேசியுள்ளனர். எனவே, உதயநிதி உள்ளிட்டோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். சனாதன ஒழிப்பு மாநாட்டு நிகழ்ச்சியில் அமைச்சர்கள் உதயநிதி, சேகர்பாபு கலந்துகொண்டதை சட்டவிரோதம் என அறிவிக்க வேண்டும்.

மேலும், சனாதனம் குறித்து சர்ச் சைக்குரிய கருத்துகளை பேசிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும். இந்த நிகழ்ச்சி நடத்தியதன் பின்னணியில் ஏதேனும் சதி உள்ளதா என்பது குறித்து கண்டறிய சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடக் கோரி ஜெகநாதன் என்பவர் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், சனாதன சர்ச்சை பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலினும், சனா தன எதிர்ப்பு மாநாட்டில் அமைச்சர்கள் பங்கேற்றமை தொடர்பாக தமிழக அர சும் பதிலளிக்க வேண்டும் என்றும் உத்தர விட்டுள்ளார்.

---

# அ.தி.மு.கவுடன் பிரச்சினை இல்லை: அண்ணாமலை கருத்து

எனக்கும், அ.தி.மு.கவுக்கும் பிரச்சினை இல்லை என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அதேபோன்று அ.தி.மு.கவுக்கும் பா.ஜ.க. தலைவர்களுக்கும் இடையே பிரச்சினை ஏதும் இல்லை என முன் னாள் அமைச்சர் செல்லூர் ராஜு தெரிவித்துள்ளார். இதன்மூலம் இரு கட்சிகளிடையே சமரசம் ஏற்பட்டு வருகிறது.

முன்னாள் முதல்வர் அண்ணா தொடர்பாக சமீபத்தில் அண்ணாமலை தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. அவரது கருத்துக்கு அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் கண்டனம் தெரிவித் திருந்தார்.

கோவை விமான நிலையத்தில் நேற்று அண்ணாமலை செய் தியாளர்களிடம் கருத்து தெரிவிக் கையில், அண்ணாமலைக்கும், அ.தி. மு.கவுக்கும் பிரச்சினை இல்லை. பா.ஜ.கவுக்கும், அ.தி.மு.கவுக் கும் பிரச்சினை இல்லை. அ.தி.மு.க வில் உள்ள சில தலைவர் களுக்கும் அண்ணாமலைக்கும் பிரச்சினை இருக்கலாம்.

நான் யாரையும், எங்கேயும் தவறாக பேசவில்லை. எனது தன்மானத்தை கேள்விக் குறியாக்கினால் பதில் பேசுவேன். அது என் உரிமை. தன்மானத்தை விட்டுக்கொடுத்து அரசியல் செய்யமாட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

# நிஜ்ஜர் கொலையில் விசாரணையில் கனடாவுடன் இணைந்து செயற்படுங்கள்!

## இந்தியாவிற்கு ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு



நிஜ்ஜர் கொலையில் விசாரணை மற்றும் நீதி வழங்கப்படுவதற்கு கனடாவுடன் இணைந்து செயற்படுமாறு இந்தியாவிற்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.

கனடாவில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப்சிங் நிஜ்ஜர் கொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில் இந்தியா– கனடா இடையே ராஜதந்திர முறுகல் நிலை தோற்றம் பெற்றுள்ளது.

பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதன் ஊடாக கனடா இன்னொரு பாகிஸ்தானாக மாறி வருகிறதா? என்று இந்திய தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே கனடா பிரஜைகளுக்கு இந்தியாவில் விசா அனுமதிகள் மறுக்கப்பட்டுள்ளது. ராஜதந்திர ரீதியாக இரு நாடுகளும் விமர்சனங்களை வெளிப்படுத்தியிருந்தன.

இந்த நிலையில், நிஜ்ஜர் கொலையில் விசாரணை மற்றும் நீதி வழங்கப்படுவதற்கு கனடாவுடன் இணைந்து செயற்படுமாறு இந்தியாவிற்கு கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையில், 'நிஜ்ஜர் கொலை விவகாரத்தை இந்திய அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

முழு வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்தவும், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்தவும் எங்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளார்.

# கனடாவில் வாழும் இந்துக்கள் இந்தியா செல்லவேண்டும்!

## காலிஸ்தான் அமைப்பு எச்சரிக்கை




கனடாவில் வாழும் இந்தியர்களும், இந்துக்களும் நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவிற்கு செல்ல வேண்டும் என காலிஸ்தான் அமைப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், நீங்கள் இந்தியாவை மட்டும் ஆதரிக்கவில்லை. காலிஸ்தான் தனிநாடு கோருவோர் மீதான அடக்குமுறையையும் ஆதரிக்கிறீர்கள் எனவும் ஆகையால் கனடாவை விட்டு வெளியேறி இந்தியாவுக்கு செல்லுங்கள் என்றும் பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தியாவின் பஞ்சாப், அரியானாவில் சீக்கியர்கள் பகுதிகளை ஒருங்கிணைத்து காலிஸ்தான் என்ற பெயரில் தனிநாடு அமைக்க வேண்டும் என சீக்கியர்கள் ஆயுதப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம் முறியடிக்கப்பட்டதுடன் இதனால் இந்தியாவை விட்டு தப்பி ஓடிய சீக்கியர்களில் இலட்சக்கணக்கானோர் கனடாவில் அகதிகளாக அடைக்கலம் புகுந்ததாக கூறப்படுகிறது.

கனடாவின் மொத்த மக்கள் தொகையில் சீக்கியர்கள் தற்போது 2.1 சதவீதம் இருகின்றனர் என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால், கனடா அரசியலிலும் சீக்கியர்கள் பங்களிப்பு வலிமையாகிய நிலையில் இந்தியாவால் தேடப்படும் பல சீக்கிய பயங்கரவாதிகளை கனடா ஒப்படைக்காத வேளையில், தேடப் படும் பயங்கரவாதிகள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கனடாவில் நிகழ்ந்த இந்த கொலைகளுக்கு இந்தியாதான் காரணம் என்று கனடா குற்றம் சாட்டிய தோடு இந்திய தூதரக அதிகாரியையும் வெளியேற்றியுள்ளது.

இதை கண்டித்த இந்தியா கனடாவின் தூதரக அதிகாரியை வெளியேற்றிய விடயம் இரு நாடுகளிடையேயான உறவில் விரிசல் நிலையை அதிகப்படுத்தியது.

இந்த சூழ்நிலையில் சீக்கியர்களுக்கான நீதி அமைப்பு என்ற காலிஸ்தான் பயங்கரவாத இயக்கம், கனடாவில் வாழும் இந்துக்களை எச்சரித்துள்ளது.

# பெட்ரோல் - டீசல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தடை!




பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்கு ரஷ்யா தற்காலிக தடை விதித்துள்ளது.

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் ரஷ்யா இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

உலக நாடுகளின் பொருளாதார தடை காரணமாக ரஷ்யாவில் பணவீக்கம், விலைவாசி ஏற்றம் அதிகரித்து மக்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில், நாட்டின் பொருட்களிற்கான விலை ஏற்றத்தினை குறைப்பதற்காக இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளது என ரஷ்யா அறிவித்துள்ளது.

இதன் காரணமாக ரஷ்யாவில் உள்நாட்டில் எரிபொருளின் விலை 4 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளது.

ரஷ்யா ஒரு நாளைக்கு 9 லட்சம் பேரல்கள் டீசல் மற்றும் 60 ஆயிரம் முதல் ஒரு லட்சம் பேரல்கள் பெட்ரோல் ஏற்றுமதி செய்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.




# முல்லைத்தீவில் உலக சமாதான நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக சமாதான தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் சமாதான நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்து.

உலக சமாதானத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் உலக சமாதான தினத்தில் கடந்த கால யுத்தத்தில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களிடத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலேயே சர்வதேச சமாதான நிறுவனமும், ஏனைய அரச நிறுவனங்களும் இணைந்து நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தன.

சர்வமதத் தலைவர்களின் ஆசியுரையுடன் ஆரம்பிக்கப்பட்ட குறித்த நிகழ்வில் சகல இனங்களினதும் கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.

சமாதான தினத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்கள் 180



பேருக்கு பாதணிகள் வழங்கப்பட்டன.

அதனை தொடர்ந்து மாணவர்களை மகிழ்விப்பதற்கான இராணுவத்தினரின் இசை நிகழ்வும் விருந்துபசாரமும் நடைபெற்றிருந்தன.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கௌரவ காதர் மஸ்தான் கலந்து கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட பதில் அரச அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்), புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ஜெயகாந், முல்லைத்தீவு இராணுவ பாதுகாப்பு தலைமையகப் பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் எம்.கே. ஜெயவர்த்தன, கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலாளர், துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர், சமுர்த்தி பணிப்பாளர் மற்றும் முப்படை அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், துறைசார் திணைக்கள அதிகாரிகள், சர்வமத தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# மாணவர்கள் மீது கொடூரத் தாக்குதல்

## பாணந்துறையில் சம்பவம்

பாணந்துறை, பின்வத்தை பிரதேசத்தில் இரு பாடசாலை மாணவர்கள் மீது கொடூரமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் மீது 'ஹெல்மட்' டால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் கைகளால் அடித்துத் தாக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை மேற்கொண்டனர் என்று கூறப்படும் நான்கு இளைஞர்களைக் கண்டுபிடிக்கப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தாக்குதலுக்கு உள்ளான பாணந்துறையில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றின் மாணவர்கள் இருவர் பாணந்துறை வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் இருவரும் நேற்று பாடசாலை முடிந்து பின்வத்த பிரிவென வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த போது சந்தேக நபர்கள் வந்து தாக்கினர் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

தலை, கண் மற்றும் உடலின் பல பாகங்களில் மாணவர்களுக்குக் காணங்கள் ஏற்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.



# மரக் கன்றுகள் விநியோகம்

(எம். எப். நவாஸ்)

பசுமை புரட்சியை ஏற்படுத்துவோம் என்ற திட்டத்தின் கீழ் பிராந்திய வன இலாக அதிகாரியின் உதவியுடன் மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

நகுமத்துல்லாஹ்-சீதாவின் வேண்டுகோளுக்கு இகிணங்க நேற்று (21) அக்ஃமின்ஹாஜ் மகா வித்தியாலயம், அக்ஃதாறுல் ஹஸனாத் வித்தியாலயம், மஹாஸினி அறபுக் கல்லூரி, ஜெஸ்கா மற்றும் பயனாளிகள் ஆகியோர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.




# போதைப்பொருள் எதிர்ப்பு; கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்!

(அ.அஸ்வர்)

கிரான் பிரதேச செயலர் பகுதிக்கு உட்பட்ட கூழாவடி பகுதியில் "போதைப் பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மது விற்பனையை ஒழிப்போம்" எனும் தொனிப்பொருளில் கவனவீர்பு ஆர்ப் பாட்டம் இன்று (22) காலை கிராம மக்களினால் முன்னெடுக்கப்பட்டது.

மாவட்டத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மது விற்பனையை ஒழிக் கும் நோக்கில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

கூழாவடி கலைவாணி வித்தியாலய முன்றலிலிருந்து பிரதான வீதி ஊடாக கூழாவடி சந்திவரை சென்று மீண்டும் பாடசாலை வளாகத்தை வந்தடைந்தது.

அங்கு அருவி பெண்கள் வலையமைப்பால் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பான வீதியோர நாடகம் ஒன்றும் இடம்பெற்றது.

அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான மயூரி ஜனனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்க ளுக்கு அமைவாக குறித்த கிராம மக் களிடையே கலந்துரையாடல் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

'போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மது விற்பனையை ஒழித்தல்' என்பன தொடர்பாக இளை ஞர், யுவதிகள் மற்றும் வயோதிபர்களுக் கிடையே விழிப்புணர்வூட்டும் செயற் பாட்டிடையும் அங்கு முன்னெடுத்தி ருந்தனர்.

வீதி நாடகத்தை பல்கலைக்கழக இளைஞர் நாடக குழுவினர் திறம்பட நடித்து போதை ஒழிப்பு தொடர்பான பல விடயங்களை முன்கொண்டு வந்தனர்.

இந்த நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் பாடசாலை வளாகம் சிர மதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

அருவி பெண்கள் வலையமைப்பின் உதவி இணைப்பாளர் தர்ஷனி ஸ்ரீகாந்த், கணக்காளர் எஸ்.உஷாந் தினி, பிரதேச செயலக பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அருவி பெண்கள் வலையமைப்பின் உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி சங்க பிரதிநிதிகள் பாசாலை ஆசிரியர் கள், மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை திணைக்களங்களின் ஊழியர்களுக்குக் கருத்தரங்கு





(நூருல் ஹுதா உமர்)

கிழக்கு மாகாண அரச திணைக்க ளங்களில் அலுவலக சிற்றூழியர்கள் மற்றும் சாரதிகளாக பணியாற்றுபவர் களுக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவால் நேற்று (21) பயிற்சிக் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்ற பயிற்சிக் கருத்தரங்கில் அலுவலக சிற்றூழியர்கள், சாரதிகள் என 70 பேர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஏ.றஹீம் பிரதம வளவாளராக கலந்துகொண்டு அலு வலக பணியாளர்களின் அரச கடப்பாடுகள், பொறுப்புக்கள் மற்றும் ஒழுக்காற்று நடைமுறைகள் தொடர்பாக விரிவுரை நிகழ்த்தினார்.